DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, VELLORE DISTRICT

Name: சஞ்சீவி

Father Name    கண்ணாளன்

Village: திருப்பத்தூர்

Taluk:
Caste:
Calling:
Religion:
Age: 65

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day    of  01.08.2023

O.S.No.112/2017   DW1

3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1. வழக்கு சொத்தின் சர்வே எண்.111/1 டி என்றால் சரிதான். சர்வே எண்.111/1 டி சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு  என்றால் ஆரம்பத்தில் 17.5 எக்டேர் விஸ்தீரணம் இருந்த நிலையில், மோசடியாக திருத்தல் பத்திரம் பதிவு செய்த பிறகு 19.5 எக்டேர் அளவாக வருவாய்த்துறை ஆவணங்களில் பதிவாகியுள்ளது.  சர்வே எண்.111/1 டி சொத்தின் 3 ம் பிரதிவாதி கண்ணனின் சகேதாரர்  கோவிந்தசாமி என்பவர் 7-1/2 செண்ட் அளவுள்ள சொத்தினை 22.09.1986 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் படி கிரையம் பெற்றுள்ளார்  என்றால் சரிதான்.  மேற்படி கோவிந்தசாமிக்கு நேரடி வாரிசுகள் இல்லாததால் அவரது அண்ணனான 3 ம் பிரதிவாதி கண்ணன் மேற்படி 7-1/2 சொத்தினை அனுபவித்து வந்தார் என்றால் சரிதான்.

2. 3 ம் பிரதிவாதி கண்ணன் அனுபவித்து வரும் 7-1/2 சொத்தின் செக்குபந்தியானது, ரோடுக்கு தெற்கு,  கிரையம் கொடுத்தவர்களின் சொத்துக்களுக்கு மேற்கு மற்றும் வடக்கு, சர்வே எண்.112 சொத்திற்கு கிழக்கு என்றால் சரிதான். மேலேசொன்ன 7-1/2 செண்ட் சொத்து எந்த காலத்திலாவது வாதிகளின் சுவாதீனத்தில்  இருந்து வந்துள்ளதா என்றால் இல்லை,  கண்ணனின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது.  அதேபோல  3 ம் பிரதிவாதியின் தம்பி கோவிந்தசாமி சர்வே எண்.112 ல் சொத்தின்  கிரையம் பெற்ற சொத்தும்,  தற்போது 3 ம் பிரதிவாதி கண்ணன் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

3. கோவிந்தசாமி கிரையம் பெற்ற வழக்கு சொத்து சர்வே எண்.112/1 டி-ல்  உள்ள 7-1/2 செண்ட் சொத்தின் எங்களுக்கு எதாவது உரிமை உள்ளதாகவோ, வண்டி வழிபாதை உள்ளதாகவோ சொல்கிறேனா என்றால், நான்  அந்த சொத்தில் எந்த உரிமையும்  கோரவில்லை, வாதிகள் தான் எங்களுக்கு எதிராக நான் வண்டி வழி அமைக்க முயற்சிப்பதாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.  3, 4 பிரதிவாதிகள் எங்களுடன் சேர்ந்து வாதிகளின் சொத்தில் அத்துமீறல்

செய்ததாக வாதிகள் தெரிவித்துள்ளது தவறு என்றால் ஆமாம், தவறு தான் நாங்களும் அத்துமீற வில்லை, 3, 4 பிரதிவாதிகளும் அத்துமீறவில்லை.



4. இதே வாதிகளுக்கு எதிராக நான் திருப்பத்தூர் நீதிமன்றத்தில், வேறு ஒரு வழக்கை தொடர்ந்தேன் என்றாலும், அதில் 3ம் பிரதிவாதி கணணண் என் சார்பில் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான், அவர் உண்மையை தான் சாட்சியத்தின் போது தெரிவித்தார்.

(3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடிவுற்றது)

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.